கலாதீபம்
කලාදීබම්
KALADEEPAM
தீபம் : 03 01.01.2023 – 31.01.2023 சுடர் : 01

# கலாசாலைக்கு புதிய அதிபராக லலீசன் பதவியேற்றார்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் புதிய அதிபராக 01.01.2023 முதல் செயற்படும்படியாக இசுருபாய கல்வி அமைச்சின் செயலாளரால் சந்திரமௌலீசன் லலீசன் நியமிக்கப்பட்டுள்ளார். 01.01.2023 ஞாயிற்றுக்கிழமை கலாசாலையில் உள்ள யோகாம்பிகா சமேத யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவஸ்ரீ செல்வசேனக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற விசேட பூசையைத் தொடர்ந்து புதிய அதிபர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். கலாசாலையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர் வீரகத்தி கருணலிங்கம் சம்பிரதாயபூர்வமாகத் தனது கடமைகளை சுபநேரத்தில் தொடர்ச்சி பக்-02

## கலாசாலையில் புதன்கிழமைகளில் காலை ஒன்று கூடல் (அசெம்பிளி) புதிதாக ஆரம்பம்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் காலைப் பிரார்த்தனைச் செயற்பாடு இதுநாள் வரை இடம்பெற்று வந்த நிலையில் புதன்கிழமை அசெம்பிளி என்ற புதிய செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை கடந்த 11.01.2023 புதன்கிழமை வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருஞானம் யோன் குயின்ரஸ் அவர்கள் சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கிவைத்தார். திருக்குறள் வழிபாடு, தமிழ் வாழ்த்து, ஆசிரிய கீதம் தொடர்ச்சி பக்-02

## ஆசிரிய கலாசாலையில் பொங்கல் விழா



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பொங்கல் விழா 16.01.2023 காலை 8.30 மணிக்கு கலாசாலை முற்றத்தில் கலாசாலை நுண்கலை மன்ற ஏற்பாட்டில் நடைபெற்றது. கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க பெருந்தலைவருமாகிய தொடர்ச்சி பக்-02

## ஆசிரியத்துவம் சார்ந்த பல்வேறு திறன்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்

இசுருபாய கல்வி அமைச்சின் பிரதம ஆணையாளர் அறிவுரை



ஆசிரியத்துவம் தொடர்பான பல்வேறு திறன்களை ஆசிரிய கலாசாலையில் பயிலும் காலத்தில் கற்றுக்கொள்ளுங்கள். வகுப்பறை முகாமைத்துவம், நிகழ்நிலைக் தொடர்ச்சி பக்-02

**ஆசிரிய கலாசாலையில் பொங்கல்...**

பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டனர். பொங்கல் செயற்பாடும் அதற்கான விளக்கங்களும் என்ற பொருளில் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் செயன்முறை ரீதியாக ஆசிரிய மாணவர்களுக்கு விளக்கவுரை வழங்கினார்

கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ. கருண லிங்கம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். பொங்கல் தொடர்பாகக் கும்மி கோலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளில் உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவர்கள் ஈடுபட்டனர்.

நுண்கலை மன்ற காப்பாளர் ரஜிதா சின்னத்துரை வாழ்த்துரை வழங்கினார். விரிவுரையாளர் கு.பாலசண்முகன் நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார். சமய வேறுபாடுகளை களைந்து அனைத்து மாணவர்களும் பானையில் பொங்கல் அரிசியிட்டமை சிறப்பம்சமாக அமைந்திருந்தது.

**ஆசிரியத்துவம் சார்ந்த...**

கற்கை மென்பொருள்கள் பற்றிய அறிவு இன்று மிகவும் அவசியமாக உள்ளது. இவற்றை வெற்றிகரமாகக் கையாளக்கூடியவர்களே இன்று கல்வித் துறைக்கு அவசியமாகவுள்ளனர். இலங்கையின் ஆசிரிய கல்வியில் ஆசிரிய கலாசாலைகளின் பங்கு அளப்பரியது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை 1923 இல் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நூற்றாண்டு காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நூற்றாண்டுக் காலத்தில் கலாசாலையில் நின்று வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன் என்று கலாசாலைக்கான கண்காணிப்பு விஜயத்தை கடந்த 25.01.2023 அன்று மேற்கொண்ட கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதம ஆணையாளர் எச்.எச்.வி.எம். சஞ்சீவனி அம்மையார் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் கலாசாலை மிக அமைதியாகவும் சுத்தமாகவும் காணப்படுகின்றது. ஆசிரிய மாணவர்கள் ஆசிரியர்களுக்குரிய ஒழுக்கமுடைய ஆடைக்கோலங்களுடன் உள்ளனர். ஆசிரிய கல்வியின் வெற்றிக்காக உழைக்கும் அதிபர் பிரதி அதிபர் மற்றும் விரிவுரையாளர்களைப் பாராட்டுகின்றேன் என்றார். இதன்போது பிரதம ஆணையாளருக்கு கலாசாலையின் நூற்றாண்டுக் கௌரவமும் வழங்கப்பட்டது. அவருக்கான பொன்னாடையை உபஅதிபர் சத்தியா றஞ்சித் அணிவித்தார். சிரேஸ்ட விரிவுரையாளர் சிவலோஜனி சுரேந்திரன் மாலை அணிவித்துக் கௌரவித்தார்.

**கலாசாலைக்குப் புதிய...**

கையளித்தார். முன்னாள் விரிவுரையாளர் வி எஸ் குணசீலன் மற்றும் கலாசாலையின் விரிவுரையாளர்கள் கல்விசாரா அலுவலர்கள் பலரும் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொண்டனர். சந்திரமௌலீசன் லலீசன் தென்மராட்சி சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையின் தரம் 2 இனைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஆவார். 2014 ஆம் ஆண்டு தொடக்கம் கலாசாலையில் பிரதி அதிபராகச் செயற்பட்டவர் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**புதன்கிழமைகளில்...**

என்பவற்றுடன் ஆரம்பமாகும் இந்தச் செயற்பாட்டில் ஆசிரிய மாணவர் உரை, விரிவுரையாளர் உரை, கலாசாலைக்கு வெளியே இருந்து வருகை தரும் புலமையாளர் உரை என உரைகள் இடம் பெற்று வருகின்றன. ஆண் விரிவுரையாளர்களும் ஆசிரிய மாணவர்களும் அன்றைய தினம் கழுத்துப் பட்டி அணிந்து நிகழ்வுகளில் பங்கேற்று வருகின்றனர்.

இந்த வகையில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் 21 ஆம் நூற்றாண்டின் ஆசிரிய கல்வி என்ற பொருளில் உரையாற்றினார். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் தமிழ் பாரம்பரியம் என்ற பொருளில் கலாசாலையின் தமிழ்த்துறை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் உரையாற்றினார். இரண்டாம் வருட தமிழ்நெறி ஆசிரிய மாணவர் சுரேஷ் தேவசகாயம் ரொபேர்ட் நிகழ்வை முன்னிலைப்படுத்தினார். இரண்டாம் வருட கிறிஸ்தவ நெறி ஆசிரிய மாணவி கி.செல்வசாந்தி வழங்கிய ஆசிரியத்துவம் என்ற பொருளிலான உரையும் இடம்பெற்றது.

# கலாதீபம்

කලාදීබම් KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කළා දීපම් , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### கலாசாலை அன்னைக்கு வயது நூறு

கோப்பாய் ஆசிரிய கலாசாலை தொடங்கப்பெற்று நூறு ஆண்டுகள் ஆகின்றன. 1923 ஆம் ஆண்டு அக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் மிசனிரிமாரும் சைவர்களும் இணைந்து நடத்திய கோப்பாய் ஆசிரியர் வித்தியாசாலை என்ற நிறுவனம் அரசினால் பொறுப்பேற்கப்பட்டு யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரியர் கல்லூரி எனப் பெயர் சூட்டப்பட்டது. இந்த நூற்றாண்டுகளில் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கிய நிறுவனமாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அன்னை தனது பெருமையைச் சுமந்து நிற்கின்றாள்.

கலாசாலை தனது வரலாற்றில் எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் கண்டுள்ளது. ஆசிரிய நியமனம் குறித்து இன்னும் இலங்கை அரசின் கல்விக் கொள்கையில் நிலைபேறான தன்மை இல்லாமையால் இந்த எழுச்சியும் வீழ்ச்சியும் காலத்துக்குக் காலம் இடம்பெற்று வருகின்றது. அரசினால் ஆசிரியராக நியமனம் பெற்றவர்கள் தமது ஆசிரிய வாண்மை விருத்தி சார்ந்த கல்வியைப் பெற ஆசிரிய கலாசாலைகளை நாடுகின்றனர். ஒரு காலத்தில் 2000 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதிகளில் உயர்தரம் கற்றவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் மூலம் ஆசிரிய நியமனங்கள் இடம்பெற்றன. 1985 முதல் செயற்படத்தொடங்கிய தேசிய கல்வியியல் கல்லூரிகள் 2000 ஆண்டில் பரவலாக விரிவாக்கம் பெற்றமையால் கல்வியியல் கல்லூரிக்கான உள்வாங்கல் உயர்தரப் பரீட்சையின் இசற் புள்ளி அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.

2000 இற்கு பிற்பட்ட காலத்தில் தொண்டர் ஆசிரியராகப் பணியாற்றியவர்கள் ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்ட போது அவர்களுக்குரிய பயிற்சியை ஆசிரிய கலாசாலைகள் வழங்கின. தற்போது தொண்டர் ஆசிரிய நியமனமும் நிறுத்தப்பட்டுள்ளது. உயர்தொழினுட்பக் கல்லூரிகள் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களில் டிப்புளோமா சான்றிதழ் பெற்று ஆசிரிய நியமனம் பெறுபவர்களுக்கு ஆசிரிய வாண்மைத்துவம் சார்ந்த பயிற்சிகளை வழங்கும் நிறுவனமாக ஆசிரிய கலாசாலை திகழ்கின்றது.

ஆசிரிய கலாசாலைகளின் எதிர்காலம் குறித்து தெளிவான ஒரு பார்வை ஏற்படுத்தப்பட வேண்டும். தண்ணீர் விட்டோ

தொடர்ச்சி பக்-04


## கலாதீபம் குழுமம்

(எட்டாவது சுடர்)

**பிரதம ஆசிரியர்**

திரு. சந்திரமௌலீசன் லலீசன்
(அதிபர், கோப்பாய் ஆசிரியகலாசாலை)

**இணை ஆசிரியர்**

தர்சினி முத்துராஜா
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியகலாசாலை, காப்பாளர், ஊடகக் கழகம்)

**வள ஆலோசனை**

திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
திருமதி சத்தியாரஞ்சித்
(உபஅதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**ஆசிரியர் குழு**

செல்வி மாலதி பத்மநாதன்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
திரு வேலும்மயிலும் நந்தகுமார்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
செல்வி சுஜீவா அருள்லிங்கம்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
திரு தங்கன் இன்பதாசன்
(ஆசிரிய மாணவர் – உடற்கல்வி 2021 – 2022)

**கணினி வடிவமைப்பு**

திரு இராமலிங்கம் இளங்கீரன்
(பழைய ஆசிரிய மாணவர் – ஆரம்பக்கல்வி, மு/புத்துவெட்டுவான் அ.த.க. பாடசாலை)

*கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையராவர். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாகக் கொள்ளப் படமாட்டா.*

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரிய கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி : 0212230323

# முன்பள்ளிக் கல்வியில் சவால்களும் சாத்தியப்பாடுகளும் விசேட உரை

## லண்டன் மூத்த பொறியியலாளர் ந.சச்சிதானந்தன் பங்கேற்றார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம் பெற்றுவரும் புதன்கிழமை அசெம்பிளி செயற் பாட்டின் அதிதி உரையை கடந்த 25.01.2023 புதன் கிழமை லண்டனில் இருந்து வருகை தந்த மூத்த பொறியியலாளரும் இலங்கையில் கல்விச்சுடர் என்ற மாதப் பத்திரிகையை வெளிக்கொணர்ப வருமாகிய ந.சச்சிதானந்தன் ஆற்றினார். இலங் கையில் முன்பள்ளிகளின் தற்போதைய நிலை தொடர்பாகவும் அவற்றை மேம்படுத்துவது தொடர் பாகவும் தனது கருத்துரையை ஆற்றினார். இவருக்கான அறிமுகவுரையை விரிவுரையாளர் வசந்தி வைத்திலிங்கம் வழங்கினார். விரிவுரையா ளர் சார்பில் அ.பாலச்சந்திரமூர்த்தியும் ஆசிரிய மாணவர்கள் சார்பில் உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி பொன்ராஜன் திவ்யாவும் உரையாற்றினர்.



## யோகலிங்கேசுவரர் ஆலயத்தில் பொங்கல்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கோவில் கொண்டருளும் யோகாம்பிகை சமேத யோகலிங் கேசுவரப் பெருமான் ஆலயத்தில் 15.01.2023 ஞாயிறு பொங்கல் தினத்தன்று காலை 11 மணி க்கு பொங்கல் வைபவம் இடம்பெற்றது. ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ வி.செல்வசேனக்குருக்கள் தலை மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலாசாலை சமூகதவர் பக்திபூர்வமாக பொங்கல் செயற்பாடு களில் ஈடுபட்டனர்.

### கலாசாலை அன்னைக்கு...

வளர்தோம் சர்வேசா இப்பயிரைக் கண்ணீராலே காத்தோம் என்ற பாடலடிகளே இங்கு நினைவில் வருகின்றன. இந்நிலை யில் தற்போது இலங்கையில் இயங்கு நிலையில் உள்ள எட்டு ஆசிரிய கலாசாலைகளுள் நூற்றாண்டு காணும் நிலையில் கோப் பாய் ஆசிரிய கலாசாலை திகழ்கின்றது. இந்நிலையில் ஆசிரிய கல்விக்காக காலத்திற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொண்ட நிறுவனமாக ஆசிரிய கலாசாலைகளை உருமாற்றும் பணி குறித்து இலங்கைக் கல்வி குறித்துத் தீர்மானம் மேற்கொள்வோர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## கல்விமுதுமாணி அணியினரின் களத்தரிசிப்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி முது மாணிக் கற்கையை மேற்கொள்ளும் கல்விசார் உத்தியோகத்தர்கள் பன்னிருவர் தமது கற்றலின் ஓரங்கமாக கலாசாலையில் கடந்த 09 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை களத்தரிசிப்பு மேற்கொண்டனர். கலாசாலையில் உள்ள நல்ல நடைமுறைகளை உள்வாங்குவதும் மேம்படுத்த வேண்டிய நடைமுறைகள் பற்றி கலாசாலைக்கு ஆலோசனை வழங்குவதும் அவர்கள் வருகை யின் நோக்கம் ஆக அமைந்தது. இவர்களுக்கான நெறிப்படுத்துநராக கலாசாலையின் பிரதி அதிபர் க.செந்தில்குமரன் செயற்பட்டார்.

# வெற்றிகரமான ஆசிரியர் ஆகுங்கள்
# தேர்ச்சிகளை இனங்கண்டு கற்பித்தலை மேற்கொள்ளுங்கள்

## ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் ச.இரவீந்திரநாதன் அறிவுரை



இலங்கையின் கல்வி இலக்குகளை சரியாக இனங்கண்டு கொள்வதன் ஊடாகவே மாணவர்களுக்கு எத்தகைய தேர்ச்சிகளை வழங்க வேண்டும் என்பதை புரிந்து கொள்ளலாம். அதன் அடிப்படையிலேயே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் அமையவேண்டும். தேர்ச்சி மையக்கல்வி என்ற எண்ணக்கருவின் விளக்கத்தை வழங்கி மேற்கண்டவாறு 18.01.2023 புதன் காலை ஒன்றுகூடல் (அசெம்பிளி) அதிதி உரையை வழங்கினார் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.இரவீந்திரநாதன். உடற்கல்வி நெறி ஏ வகுப்பின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற புதன் ஒன்றுகூடல் நிகழ்வில் திருக்குறள் வழிபாடு, தமிழ்த்தெய்வ வழிபாடு ஆசிரிய கீதம் என்பன இசைக்கப்பட்டன. தொடர்ந்து முதலாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி எஸ். தர்மினி கல்விச் செயற்பாடுகளில் 4 சி என்ற பொருளில் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து விரிவுரையாளர் வே.சேந்தன் 21 ஆம் நூற்றாண்டுக்கான திறன்களை அறிதலும் யதார்த்தக் கற்றலும் என்ற பொருளில் உரையாற்றினார்.

## மன்னார் அல்அஸ்ஹர் தேசியப் பாடசாலை உயர்தரமாணவர் கலாசாலையைத் தரிசித்தனர்.



மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையில் உயர்தர வகுப்பில் தமிழை ஒரு பாடமாக கற்கும் மாணவர்கள் தமது ஆசிரியை பண்டிதை சுஜானாவுடன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையை பார்வையிட 28.01.2023 சனிக்கிழமை வருகை தந்தனர். ஆசிரியை சுஜானா 2009 - 2010 காலப்பகுதியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தமிழ் சிறப்பு நெறியில் பயின்று ஆசிரியராக கடமை ஆற்றுகிறார். தனக்கு கல்வி தந்த கலாசாலையை தரிசிக்க தனது பிள்ளைகளையும் அழைத்து வந்திருந்தார். கலாசாலை அதிபர் மற்றும் பிரதி அதிபர் ஆகியோர் இணைந்து அவர்களை வரவேற்றனர்.

## கலாசாலையின் புதிய பிரதி அதிபராக செந்தில்குமரன்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் புதிய பிரதி அதிபராக கணபதிப்பிள்ளை செந்தில்குமரன் நியமிக்கப்பட்டு 01.01.2023 ஞாயிற்றுக் கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையின் தரம் 2 உத்தியோகத்தராகிய இவர் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 2000 ஆம் ஆண்டு தொடக்கம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகச் செயற்பட்டு 2017 ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராக இடமாற்றம் பெற்று வருகைதந்த இவர் விரிவுரையாளர் கழகத்தின் முன்னாள் தலைவராகவும் செயற்பட்டிருந்தார்.

## கலாசாலையின் புதிய உப அதிபராக சத்தியா ரஞ்சித்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் உதவி அதிபராகச் செயற்பட்டு வந்த இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவை தரம் 2 உத்தியோகத்தராகிய சத்தியா ரஞ்சித் உபஅதிபராக செயற்படுமாறு நியமிக்கப்பட்டுள்ளார். புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் பலாலி ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகச் செயற்பட்டிருந்தார்.

# கலாசாலை மைதானத் துப்பரவாக்கல் — பணிகளில் இராணுவத்தினர் —



கலாசாலை மைதானத்தில் பாரிய அளவில் புற்கள் வளர்ந்து பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்பட்ட நிலையில் அதனை இலங்கை இராணு வத்தின் 51 ஆவது படையணியைச் சேர்ந்த சிப் பாய்களும் கலாசாலையின் உடற்கல்வித்துறை யினரும் இணைந்து சிரமதான அடிப்படையில் பாவனைக்கு உகந்ததாக மாற்றி அமைத்தனர். கலாசாலை அதிபர் ச.லலீசனின் வேண்டுகோளை ஏற்று இராணுவத்தின் 51 ஆவது படையணியின் கோப்பாய் பிரிவு தளபதி மேஜர் தம்மிக அத்துக் கோறள தனது படைச் சிப்பாய்களை புல்லுவெட்டி இயந்திரங்களுடன் களமிறக்கியிருந்தார். உடற் கல்வி துறையினரும் பிரதிஅதிபர் க. செந்தில்கு மரன் விரிவுரையாளர்களான பாஸ்கரன் அன்பரசி ஆகியோரது வழிகாட்டலில் புல்வெட்டி இயந்தி ரங்கள் மற்றும் கருவிகளின் துணையுடன் களமிறங் கியிருந்தனர். ஏறத்தாழ ஐம்பது பேரின் முழுமை யான பங்களிப்புடன் கலாசாலை மைதானத்தில் வளர்ந்திருந்த பாரிய புற்கள் ஒரு நாளில் வெட்டி அகற்றப்பட்டுள்ளன.

## கலாசாலையில் புதிதாக அனுமதி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்காக திசைமுகப்படுத்தல் பயிற்சி



கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு 2022-2023 கல்வியாண்டுக்கெனப் புதிதாக அனுமதி பெற்ற 18 ஆசிரிய மாணவர்களுக்கான திசைமுகப்படுத் தல் பயிற்சி 02.01.2023 திங்கட்கிழமை ஆரம்பமாகி 12.01.2023 வியாழக்கிழமை வரை நடைபெற்றது. கலாசாலை விரிவுரையாளர் த.தவசேகரை இணைப் பாளராகக் கொண்டு இடம்பெற்ற இந்தத் திசை முகப்படுத்தல் பயிற்சியில் கலாசாலை விரிவுரை யாளர்களும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களும் கருத்துரைகளை வழங்கினர்.

## ஆறுமாதக் கனினிப் பயிற்சி பெற்ற பயிற்சியாளர் விடைபெற்றார்



**VTA** நிறுவனத்தில் கனினி பயிற்சி பெற்று NVQ - IV மட்டத்தை பூர்த்தி செய்வதற்கான நிறு வனக் களப்பயிற்சியைப் பெறுவதற்காக கோப் பாய் ஆசிரியர் கலாசாலைக்கு வருகை தந்து பயி ற்சிபெற்ற செல்வி மயூரி தனபாலசிங்கம் 11.01.2023 புதன்கிழமை தனது பயிற்சியை முடித்து கலா சாலையிலிருந்து விடைபெற்றார். அவருக்கு கற் பித்தல் சாரா அலுவலர்கள் பிரிவு உபசார நிகழ்வு ஒன்றை அதிபர் அலுவலகத்தில் நடத்திப் பரிசுப் பொருள் வழங்கி வழியனுப்பி வைத்தனர்.

# நீடித்த வாழ்க்கைக்கு உடற்பயிற்சியின் அவசியம்



நீடித்த வாழ்க்கை என்பது நோய்களற்று இருப்பது மாத்திரமல்ல மாறாக உடல், உள, சமூக, ஆன்மீக ரீதியான நலன்களின் பரிபூரண நிலையைப் பெற்றிருப்பது என்றும் கூறலாம்.

உடற்பயிற்சி என்பது திட்டமிடப்பட்ட படிமுறைக்குட்பட்ட விஞ்ஞான ரீதியான கோட்பாடுகளுக்குட்பட்ட போட்டிக்காலப் பெறுபேற்றினை விருத்தி செய்யக்கூடிய அல்லது உடலின் தொழிற்பாட்டில் வலிமையினை அதிகரிக்கக்கூடிய உடலியல் அப்பியாசங்களைக் கொண்டது என்று கூறலாம். இன்றைய காலகட்டத்தில் உள்ள பிள்ளைகள் அல்பா பரம்பரை (Alfa Generation) ஆக உள்ளதாலும் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சியால் கற்றல் செயற்பாடுகள் பெருமளவு தொழில்நுட்பம் சார்ந்து காணப்படுவதால் உடலியல் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் மாணவர்கள் சோம்பேறிகளாகி பல தொற்றா நோய்களிற்கு ஆளாகின்றனர்.

உடலியக்க செயற்பாடுகளில் ஒரு மனிதன் ஒரு மணித்தியாலமும் சிறுவர்கள் அரை மணித்தியாலமும் உடற்பயிற்சியினை செய்யவேண்டும். உடற்பயிற்சியினை மேற்கொள்ளாத போது உடற்பருமன் அதிகரித்தல், நீரிழிவுநோய், மந்த போசாக்கு போன்ற தொற்றா நோய்கள் ஏற்படுகின்றன.

தற்போது உள்ள கலைத்திட்டத்தில் பாடசாலை மாணவர்களிற்கு பின்வரும் உடற்பயிற்சி செயற்பாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.



ஆரம்பப்பிரிவு மாணவர்களிற்கு செயற்பட்டு மகிழ்வோம், ஏனைய மாணவர்களிற்கு காலை உடற்பயிற்சி, விளையாட்டு செயற்பாடு, இல்ல மெய்வல்லுனர் போட்டி என்பன இடம்பெறுகின்றன. இது மட்டுமன்றி

2023 கலைத்திட்ட மாற்றத்திலும் ஐந்து பாட வேளைகளும் ஒரு மணித்தியால உடற்பயிற்சி செயற்பாடுகளிற்கும் முன்னுரிமை வழங்கப்பட வுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஒரு மாணவனது விளையாட்டு செயற்பாடுகள் மூலம் அவன் கற்றல் செயற்பாட்டில் எவ்வாறு இருக்கின்றான் எனக் கணிப்பிட முடியும். உடற் பயிற்சியில் ஈடுபடுவதுடன் பாரம்பரிய விளை யாட்டுக்களையும் கற்றுக்கொடுப்பதால் எமது பாரம்பரிய விளையாட்டுக்கள் வளர்க்கப்படும் அத்துடன் பிள்ளைகளின் உடலியக்கத் தொழிற் பாடு துரிதமாக இடம்பெறும். உடலியல் தொழிற் பாடுகள் மூலம் மாணவரகள் கற்றலில் எவ்வாறு ஈடுபடுவார்கள் என்பதையும் அறியக் கூடியதாக இருக்கும்.

உடலியக்க செயற்பாடுகள் துரிதமாக இடம் பெறுவதற்கு உணவுப்பழக்கவழக்கமும் முக்கிய இடம் பெறுகின்றது. உணவுகளை நாம் சரியான முறையில் உட்கொண்டால் பல நோய்களில் இரு ந்து விடுபட முடியும். யுத்தகால வெடிகுண்டு இர சாயனப்பதார்த்தம் காரணமாக பல சிறுவர்கள் பெரியோர் என பலர் சிறுநீரக நோயினால் பீடிக் கப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த வரிசையில் வடமத்திய மாகாணம் முத லிடத்திலும் வடமாகாணம் இரண்டாம் இடத் திலும் கிழக்குமாகாணம் மூன்றாம் இடத்திலும் உள்ளமை கவலைக் குரிய விடயமாக காணப் படுகிறது.

பொன்ராஜன் திவ்யா
ஆசிரிய மாணவி
உடற்கல்வி (2021-2022)
கோப்பாய் ஆசிரிய
கலாசாலை



இன்றைய பெற்றோர் தமது வேலைப்பழு கார ணமாக பிள்ளைகளிற்கு பணிஸ் பற்றீஸ் போன்ற துரித உணவுகளையே Fast food இனையே பெரும் பாலும் கொடுக்கின்றனர். இதனால் மாணவர்கள் பல நோய்களிற்குள்ளாகின்றனர். இது மாத்திர மன்றி பாடசாலையில் வழங்கப்படும் உணவுகளை அதிக மாணவர்கள் உட்கொள்வதில்லை. இது தொடர்பான விழிப்புணர்வினை மாணவர்களூடாக பெற்றோருக்கு வழங்கவேண்டியது ஆசிரியர்களது பொறுப்பாகும்.

எனவே ஆசிரயர்களாகிய நாம் மாணவர்களின் உடற்பயிற்சி செயற்பாடுகளிலும் உணவுப் பழக் கங்களிலும் மிகுந்த கவனத்துடன் செயற்பட்டு ஆரோக்கியமான மாணவர் சமுதாயத்தினை உருவாக்குவது ஆசிரியர்கள் ஆகிய எமது கட மையாகும்.





# 21 ஆம் நூற்றாண்டின் அறிவுசார் சமூகம்

நில்லாது சுழலும் சக்கர அண்டத்தில் காலங்களுக்கிடையே மாற்றம் மட்டும் தான் மாறாமல் நிகழ்கிறது. ஒவ்வொரு காலங்களையும் நாம் கடக்கும்போது அல்லது அந்தக் காலம் நம்மைக் கடந்து செல்லும்போது ஏதோ ஒரு மாற்றத்தை, வளர்ச்சியை, முயற்சியை நாம் உணராமல் இருந்ததில்லை.

நூறு ஆண்டுகளைக் கொண்ட ஒரு கால அளவையை நாம் நூற்றாண்டு என்கின்றோம். எனவே இப்போது நாம் 21 ஆம் நூற்றாண்டின் முதல் கால்வாசிப் பகுதியில் பயணித்த வண்ணம் இருக்கின்றோம். இன்றைய எனது உரையின் தலைப்பும் எம்மை பற்றியது. அதாவது 21 ஆம் நூற்றாண்டின் அறிவுசார்-சமூகம் பற்றியது. The Knowledge Based Society of 21st Century.

19ஆம் நூற்றாண்டின் இயந்திர சக்திகளின் விளைவால் கைத்தொழில் புரட்சி, அதன் விளைவால் 21 ஆம் நூற்றாண்டில் கணினியுகம், அதன் பின்னர் நவீன யுகமானது அறிவுசார் சமூகத்தின் கண்டுபிடிப்புகளால் புத்துணர்ச்சி பெற்று 21 ஆம் நூற்றாண்டுக்குப் புதுப்பாய்ச்சலுடன் தயாரானது. நம் கற்பனைகளுக்கும் எட்டாத உருவங்களுக்கு உயிர் கொடுப்பதே விஞ்ஞானத்தின் விந்தையாகும். அப்படி நாம் கற்பனையிலும் எண்ணிப் பார்த்திராத அசாத்திய அம்சங்களை விஞ்ஞானத்தின் வியாபித்த பார்வையிலும் வீரிய பாய்ச்சலிலும் சாத்தியமாக்கிக் கைகூடவைத்த சமூகமே நம் அறிவுசார் சமூகம் ஆகும். Therefore it is called "The Knowledge Era".



ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் வெவ்வேறான சக்திகள் மூலதனமாக கொள்ளப்பட்டது. எம் நூற்றாண்டின் பெறுமதி மிக்க சொத்து நமது அறிவாகும். The immortal Intellectual asset/ Intellectual propery. எனவே இச் சமூகத்தின் தாரக மந்திரம் இவ்வறிவினால் திறம்பட சிந்தித்து பொருள் வளத்தை பெருக்கி மக்களின் வாழ்வியல் தரத்தை மேலும் சில படிகள் முன்னேற்றி மேம்படுத்தி அழகு பார்ப்பதே ஆகும்.

இதன் ஒரு அம்சமாக "World Intellectual Property Organization| 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதியை ஒரு விசேட கூட்டத்தில் மக்களின் அன்றாட வாழ்வில் அவர்களின் அறிவுசார் சொத்துரிமை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அத்தகைய சமூகத்தினை கௌரவப் படுத்துவதற்காகவும் ஒரு சிறப்பு நாளாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. எனவே இச்சொத்தினை விற்கும், வாங்கும், உரிமை கோரும், பாதுகாப்பளிக்கும், பிரயோகிக்கும் சட்டங்கள் அறிமுகப்படுத்

திருமதி எஸ்.தர்மினி
ஆசிரிய மாணவி
ஆங்கிலநெறி (2022 - 2023)
கோப்பாய் ஆசிரிய
கலாசாலை



தப்பட்டுள்ளன. எமது அறிவுசார் சமூகமானது பல்வேறுபட்ட துறைகளில் வெவ்வேறு விதங்களில் பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது என்றால் மிகையாகாது.

முதலில் கல்வியை உற்று நோக்கலாம். அறிவினைப் பெறும் பிரதான மூலகம் கல்வி ஆகும். ஒரு சமூகம் தழைத்து நிலைத்து நிற்க ஆணிவேராக தொழிற்படுவது கல்வி ஆகும். இத்தகைய கல்வி இருபத்தோராம் நூற்றாண்டில் திறன்கள் 21st century skills என அழைக்கப்படுகின்றது. இது வேகமாக மாறிவரும் எண்ணி மயமாக்கல் சமூகத்தில் மாணவர்களை தேர்ச்சி பெற்றவர்களாக தயார்படுத்தும் உத்திகளை உள்ளடக்கியது. இன் றைய சமூகத்திற்கு தேவையான திறன்களை The coalition P2P, (Partnership for 21st century learning) 4C என்ற எண்ணக் கருவில் உள்ளடக்கி காட்டியுள்ளது. அவையாவன,

1. CREATIVITY
2. CRITICAL THINKING
3. COMMUNICATION
4. COLLBORATION

தற்போது ஏட்டுக் கல்வியானது இணையதளத்திற்கு மாற்றம் பெற்றுள்ளது. எனினும் முன்னோர்களின் அனுபவங்களும் நாம் பெற்றுக்கொண்ட அறிவின் ஒரு பாகமாக இருப்பது நிதர்சனமான ஒன்றே. 2003 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட skype இத்தகைய ஒரு இணையவழி கற்றலுக்கு ஆரம்ப கட்டமாக இருந்தது. அதன்பின் 2011 ஆம் ஆண்டு அமெரிக்காவினால் அறிமுகப்படுத்தப்பட்ட zoom செயலி கற்றல் கற்பித்தலுக்கான பல பிரத்தியேக வசதிகளைக் கொண்டு அமைய பெற்றிருந்தது. எனினும் கீழைத்தேய நாடுகளில் இதன் பாவனை கணிசமான அளவு அதிகரித்தது Covid பெருந்தொற்றுக்கு பின்னரான காலப்பகுதியிலேயே ஆகும். இன்று Distant education தொலைதூரக் கற்றலுக்கும் நமது நாட்டின் பொருளாதார சூழ்நிலைகளுக்கும் சாதகமான தீர்வாக இச்செயலி அமைந்துள்ளது.

இதைப்போல் இன்னும் எண்ணிலடங்காத ஏராளமான செயலிகளும் வலைத்தளங்களும் அறிவுசார் சமூகத்தினால் உலகுக்கு கிடைத்த வரப்பிரசாதங்களே ஆகும்.

அடுத்ததாக அறிவு சார் பொருளாதாரம் ஒன்றில் பிரதான மூலவளமே அறிவாகும். அதுவே செல்வத்தினை உற்பத்தி செய்வதற்கான பிரதான கருவியும் ஆகும். இதனால் அறிவானது முதன்மை விசை Prime Mover என அழைக்கப்படுகின்றது. வரலாற்று ரீதியாக யுக மாற்றங்களைக் கருத்தில் கொண்டால், முதலில் விவசாய யுகம், அதனைத் தொடர்ந்து கைத்தொழில் சமூகம், அதன் பின்னர் தகவல் சமூகம், இறுதியாக அறிவுசார் சமூகமாக பரிணாமம் அடைந்துள்ளது. இத்தகைய உண்மைகளை உணர்ந்த வளர்முக நாடுகள் விரைவாக வளர்வதற்காக தமது பொருளாதா ரத்தில் அமைப்பு ரீதியிலான மாற்றங்களை Services and Information phase ஐ நோக்கி நகர்த்திக்கொண்டு செல்கின்றது.

அதற்கு சிறந்த உதாரணமாக crypto currency குறியீட்டு நாணயம் அல்லது நுண்காசு முறைமை சந்தோரி நகமோட்டோ என்பவரினால் 2009 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது வலைத்தளங்களில் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் பிட்காயின் என்ற கணினி காசாகும்.

பொழுதுபோக்கு மற்றும் வணிக தேவைகளுக்காக 21 ஆம் நூற்றாண்டின் 2000ம் ஆண்டு அறி முகப்படுத்தப்பட்ட Apple I Pod 2006 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட Twitter கீச்சகம், 2004 இல் அறிமுகப்படுத்தப்பட்ட facebook & Gmail 2005 இல் அறிமுகப்படுத்தப்பட்ட youtube உலகிலேயே துரித கதியில் பயன்படுத்தப்படும் செயலிகளாகும். இத னாலேயே facebook ஐ அறிமுகப்படுத்திய Mark Zuckerberg 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பணக்காரர்களின் பட்டியலில் நான்காம் இடத்தை பிடித்திருக்க முடிந்தது.

மருத்துவத்துறையை பொறுத்தமட்டில் உடலின் குடல் இயக்க செயற்பாடுகளில் ஏற்படும் பிரச்சினை மற்றும் ரத்தக் கசிவை கண்டறிவதற்காக 2001 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட Capsule Endoscopy எனும் முறை குறிப்பிடத்தக்கது. உடலில் உட்செலுத்தப்படும் வில்லை அளவிலான புகைப்படக் கருவி, செயற்கை கணையங்கள் என்பன இவ்யுகத்திலேயே சாத்தியமானது.

இன்று இவ்வுலகில் வியாபித்து வளர்ந்திருக்கும் அனைத்து விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்களும் அறிவுசார் சமூகத்தின் பிரதிபலிப்புகளே என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

As Albert Einstein says “WISDOM IS NOT A PRODUCT OF SCHOOLING, BUT OF THE LIFELONG ATTEMPT TO ACQUIRE IT.”

எனவே இவ்வறிவுசார் சமூகத்தின் திறன்களை பெற்று இந்நூற்றாண்டிற்காக மாணவர்களை வாழ்நாள் கல்விக்காக உருவாக்கும் பணியில் நாம் அனைவரும் பங்கு பெறுவோம்.

# News in Brief – Month of January - 2023

### 01.01.2023

**01.** Mr. Santhiramouleesan Laleesan has been appointed as the new Principal of Kopay Teachers' College with effect from 01.01.2023 by the Secretary to the Ministry of Education.

**02.** MrKanapathipillaiSenthilkumaran was appointed as the new Deputy Principal of Kopay Teachers' College and assumed his duties on 01.01.2023.

### 02.01.2023

**03.** Orientation Programme for 18 Teacher Trainees newly admitted to theKopay Teachers' College for the academic year 2022/2023 started on Monday 02.01.2023 and continued till Thursday 12.01.2023.

### 11.01.2023

**04.** The Assembly Programmeofficially started bythe Director of Education, Northern Province MrThirungnanamJohn Quintus. The Wednesday assemblyis going to be held as a new educational activity at Kopay Teacher's College.

### 12.01.2022

**05.** The Freshers' Day (Welcome Party) for the newly admitted 18 Teacher students for the academic year 2022/2023 was held on Thursday evening by the second year Teacher students. The Rtd Principal Mr. V.Karunalingam and MrsSothimalarKarunalingam participated as chief guests

### 13.01.2023

**06.** Twelve Education officers who are reading their Masters of Education course at the University of Jaffna visited to Kopay Teachers College. As a part of their learning, they participated in this internship learning programme and observed the good practices of the college fromJan. 09th to 13th.

### 15.01.2023

**07.** Thai Pongal festival was held at 11 am on 15.01.2023 Sunday at Yogambiga cum Yogalingeswara swami Temple atKopay Teachers' College.

### 16.01.2023

**08.** Thai Pongal Festival of Kopay Teaching College was held on 16.01.2023 at 8.30a.m. by College Fine Arts Union under the patronage of the College Principal Mr S.Laleesan. Jaffna University's Emeritus Professor and The Patron of the Jaffna Tamil Association Prof A. Shanmugadas and DrManonmaniShanmugadas who attended as Chief Guest to begin with the meaning of Pongal activity and its explanations Manonmani Sanm ugadas systematically gave a lecture to the students. The patron of fine arts union Miss RajithaSinnadurai delivered the blessing speech. The Jaffna NCOE presi dent Mr. S.Paramanantham and Rtd. Principal of KTC Mr V.Karunalingam participated in the function.

### 18.01.2023

**09.** The Assembly Guest Address was delivered by Retired Deputy Director of Education R. Ravindranathan. And the first year English teacher student S.Tharminidelivered a talk on 4 Cs in Education for 21 st century. the lecturerMrV.Senthan spoke on the topic of 21st Century Skills and Real Learning. Assembly event held in the regularization of Physical Education Class A.

### 25.01.2023

**10.** The Wednesday Assembly function. Events were organized and conducted by the Physical Education B Class in the morning at 8.30am. Student speech was delivered by Ms. Divya, Lecturer speech by Mr. A.Balachandramoorthy and Guest speech was delivered by Mr. Sachithanandam (Engineer- UK). The Guest was introduced by our Lecturer Ms.Vasanthi Vaithilingam.

### 25.01.2023

**11.** Chief Commissioner Appreciated. - The Chief Commissioner for Teacher Education, Ministry of Education IsurupayaMrs H.H.V.M. Sanjeewani ,visited to the Kopay Teachers College and observed the college activities. During her observation stated that the functions of the college are smoothly under taken and also appreciated the maintenance of the premises beautifully.

### 30.01.2023

**12.** 75$^{th}$ Anniversary - Prof. M.Sinnathamby of Department of Education, university of Jaffna celebr ated his 75$^{th}$ Birthday as Pavala Vila on 30.01.2023 at Jaffna NCOE main hall. The Principal and Academic staff of Kopay Teachers College participated in the function and congratulated him.



தைப்பொங்கல் விழா பிரதம விருந்தினர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் முனைவர் மனோண்மணி சண்முகதாஸ்.



புதிய ஆசிரிய மாணவர்களுக்கான வரவேற்பு விழாவின்போது பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் வி.கருணலிங்கம் தம்பதியர்.



பொங்கல் விழாவின் போது யாழ். கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எஸ்.பரமானந்தத்திற்கான வரவேற்பு.



பொங்கல் விழாவில் ஆசிரிய மாணவரின் கோலாட்டம்.



வரவேற்புவிழாவில் கலந்துகொண்டோர்.



கலாசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அசெம்பிளி செயற்பாட்டில் திருக்குறள் வழிபாடு, தமிழ்த் தெய்வ வணக்கம், ஆசிரிய கீதம் இசைக்கும் ஆசிரிய மாணவர்கள்.

இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழகத்தால் 01.02.2023 அன்று மின்னிதழாக வெயியீடு செய்யப்பட்டது.